5th February 1959]

SRI A. R. SUBBIAH MUDALIAR : கிராம உத்தியோகஸ்தர்களை நியமிக்கும் விஷயத்தில் பரம்பரை பாத்தியதையை எடுத்துவிட வேண்டுமென்று சர்க்கார் ஆலோசித்து வருகிறதா ? அப்படியானுல் எப்பொழுது அது அமுல் நடத்தப்படும் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : பரம்பரை பாத்தியதையைப் பற்றி மட்டுமன்றி, பொதுவாகவே கிராம உத்தியோகஸ்தர்களை வேறு எந்த முறையில் நியமிக்கலாம் என்பது பற்றியும் ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது.

Retirement age for industrial workers

* 30 Q.—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Industries be pleased to state the superannuation age fixed for clerks and industrial workers by the Standing Labour Committee?

THE HON. SRI R. VENKATARAMAN : No superannuation age has been fixed for clerks by the Standing Labour Committee.

In the old Standing Orders of some establishments certified under the Industrial Employment (Standing Orders) Act, prior to 17th September 1956, the age of superannuation for industrial workers was fixed at 55 years. In the Standing Orders of certain textile mills and industrial establishments certified after 17th September 1956, the age is fixed at 58 years. In an agreement, dated 15th April 1957, between the United Planters' Association of Southern India, Coonoor, and the plantation workers, the age of superannuation for the plantation workers has been fixed at sixty.

SRI T. T. DANIEL : Will the Hon. the Minister be pleased to state the principles that have been followed in fixing this age limit?

THE HON. SRI R. VENKATARAMAN : This is a matter for negotiation between the employers and the employees, and the Industrial Employment (Standing Orders) Act provides for the determination of any differences between the employers and the employees in this matter.

SRI S. LAZAR : இப்பொழுது அதிகப்படுத்தப்பட்டிருக்கிறவயது 60. இதற்கு retrospective effect கொடுக்கப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அந்தமாதிரி அதிகப் படுத்தவில்லை. மூன்று ஒப்பந்தங்களை நான் படித்தேன். ஒரு ஒப்பந்தத்தில், தோட்டத் தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தில் 60 வயது என்று கண்டிருக்கிறது. அவ்வளவுதான்.

SRI S. PAKKIRISAMI PILLAI : உடல் உழைப்பு கொடுத்து வேலை செய்யக் கூடியவர்களுக்கு, வேலையிலிருந்து நீக்கப்பட்ட பிறகு பென்ஷன் இல்லாத காரணத்தினுல், அவர்களுக்கு உடலில் வலு இருக்கும் வரையில் வேலை செய்வதற்கு ஒத்தாசை செய்ய, ரிடையர்

ஆகவேண்டுமென்று சொன்னால் மெடிக்கல் காரணத்தினால்தான் ரிடையர் ஆக்கவேண்டுமென்ற சிபாரிசை "ஸ்டாண்டிங் லேபர் கமிட்டிக்கு" இந்த அரசாங்கம் சொல்லுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இதைப்பற்றி இரண்டு விதமான அபிப்பிராயங்கள் இருக்கின்றன. வேலையிலிருந்து ஓய்வு எடுத்துக் கொள்ளும் வயதை அதிகரிப்பதினால் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிக்கும் என்ற பிரச்னையும் உண்டு. ஆகவே இதைப் பற்றி முதலாளிகளும் தொழிலாளர்களும் நேரிடையாகப் பேசி அவர்கள் ஒப்பந்தத்திற்கு வர வேண்டுமென்று விட்டிருக்கிறோம். அவர்கள் அப்படி ஒப்பந்தத்திற்கு வர முடியாவிட்டால் அவர்கள் லேபர் கமிஷனரிடம் சென்று தங்கள் குறையைத் தீர்த்துக் கொள்ள முடியும்.

Police force to prevent illicit transport of liquor

* 31 *Q.*—SRI K. B. S. MANI (on behalf of M. C. Muthukumaraswamy): கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

தஞ்சை ஜில்லா, நன்னிலம், நாகப்பட்டிணம், மாயூரம் முதலிய தாலூகாக்களை ஒட்டியுள்ள காரைக்கால் பிரஞ்சு பகுதியில் மதுவருந்த செல்பவர்களையும், மதுவைக் கள்ளக்கடத்தல் செய்பவர்களையும் தடுப்பதற்கெனத் தனிப் போலீஸ் நிறுவுவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

SRI K. PONNIAN : மதுவிலக்கு அமுலில் இருக்கும் ராஜ்யத்திற்கும் மதுவிலக்கு அமுலில் இல்லாத ராஜ்யத்திற்கும் இடையேயுள்ள தூரம் என்ன ? எவ்வளவு மைல்களுக்கு அப்பால் மதுவிலக்கு அமுலில் இருக்கும் ராஜ்யத்தில் கடைகள் வைக்கவேண்டுமென்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்தக் கேள்வி நன்னிலம், நாகப்பட்டிணம், மாயூரம் தாலூகாக்களின் பக்கத்திலுள்ள காரைக்கால், பாண்டிச்சேரி எல்லையைப் பற்றியது. அதில் மைல் கணக்கு ஒன்றுமில்லை. அவைகள் வேறு ராஜ்யம், இப்பொழுது அங்கு மதுவிலக்கு இல்லை, இங்கு இருக்கிறது. அவ்வளவுதான்.

SRI A. GOVINDASAMY : தென் ஆற்காடு மாவட்டத்தை ஒட்டியுள்ள பாண்டிச்சேரி பகுதியில், நம் பகுதிகளின் அடுத்துள்ள சில கிராமங்களில் கள்ளுக்கடைகள், சாராயக் கடைகள் இருப்பதால் இங்குள்ளவர்கள் அங்கு சென்று அதிகமாக குடிப்பதற்கு சந்தர்ப்பம் இருப்பதால் அங்கேயும் குடி ஒழிப்புத் திட்டத்தை வற்புறுத்த தென் ஆற்காடு மதுவிலக்கு கமிட்டியார் அரசாங்கத்திற்கு சிபார்சு செய்திருக்கிறார்கள். அது பற்றி அரசாங்கம் என்ன யோசித்திருக்கிறார்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை. மதுவிலக்கு கமிட்டியார் சிபார்சு செய்திருக்கலாம். ஆனால் இந்த அரசாங்கம் ஒன்றும் செய்ய முடியாது.

SRI A. V. P. ASAITHAMBI : பாண்டிச்சேரியும் தமிழகப் பிரதேசத்தை சேர்ந்திருப்பதால் அதை தாயகத்தோடு இணைத்து விட்டோமென்று சொன்னால் நேரடியாக மதுவிலக்கு அங்கேயும் வந்து விடும். ஆகவே அந்த முயற்சியை சர்க்கார் கைக்கொள்ளுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இது வேறு விஷயம். அது இதிலிருந்து எழவில்லை.